(*b*) if so, the details thereof; and

(*c*) whether the views of the Tamil Nadu Government were provided to them?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) & (உ) இம் மாநிலத் தொழில் வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதி வாய்ப்புகளைப்பற்றி ஆராயும்படியும் வெளி நாட்டுச் சந்தைகளில் அதிக அளவு விற்பனையாகும் தொழில், வேளாண்மைப் பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காகத் தகுந்த நடவடிக்கைகளை வகுக்கும்படியும் புது டில்லியிலுள்ள வெளிநாட்டு வர்த்தகம் குறித்த இந்திய நிறுவனத்தை இந்த அரசு கேட்டுக்கொண்டது. இந்த நிறுவனம் பணிந்தனுப்பிய செயற்குறிப்புகள், 1969 ஜூன்—ஜூலைத் திங்களில் தலைமைச் செயலகத்தில் நடந்த தொடர்ச்சியான பல கூட்டங்களில் தொடர்புள்ள அதிகாரிகளுடன் கலந்து விவாதிக்கப்பட்டன. இந்தக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், இந்த நிறுவனம் தனது இறுதி அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளது. இது ஆய்வில் உள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : நம் ராஜ்யத்திலிருந்து வெளி நாட்டு வாணிகத்திற்கு ஏற்ற பொருள்கள் எவை எவை இருக்கின்றன. எவ்வளவு எவ்வளவு ஏற்றுமதியாகிறது என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இவைகள் ஆய்வு செய்யப்பட்டதில் கிட்டத்தட்ட 63 பொருள்கள் நம்முடைய மாநிலத்தில் இருந்து ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பிருக்கிறது என்று கொடுத்திருக்கிறார்கள். 1967–68-ம் ஆண்டு கணக்குப்படி இந்திய நாட்டின் மொத்த ஏற்றுமதி 1,200 கோடியில் நம் மாநிலத்திலிருந்து 71 கோடி வரை ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதை இன்னும் விரிவாக்குவதற்கு என்னென்ன யோசனைகள் என்பதைப் பற்றி அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதுபற்றி அரசாங்கம் தொழில் துறையில் சம்பந்தப்பட்டவர்களையெல்லாம் கூட்டி அழைத்துப் பேசுவதற்கு முடிவு செய்திருக்கிறது.

Visit of Thailand Trade Delegation to Tamil Nadu

* 240 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any Trade Delegation from Thailand visited the State around 22nd August 1969; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தாய்லாந்து பொருளாதார அலுவல்கள் அமைச்சர் மேதகு திரு. புன்காகு அத்தசோன் அவர்களும், இந்திய அரசு நல்லுறவு அதிகாரி, தாய்லாந்துத் தூதரக அலுவலகர் ஒருவர் உள்ளிட்ட ஒன்பது பேர் அடங்கிய குழு ஒன்றும் 1969-ம் ஆண்டு ஆகஸ்டு 22-ம் நாளன்று புதுடில்லியிலிருந்து சென்னை வந்து

சேர்ந்தனர். அக் குழுவினர் இணைப்பு ரயில் பெட்டித் தொழிற்சாலை, டி.ஐ. சைக்கிள்ஸ் (இந்தியா) நிறுவனம், ஈசன் இன்ஜினியரிங் கம்பெனி, அசோக் லேலந்து நிறுவனம் ஆகியவற்றைச் சென்று பார்வையிட்டனர்.

திரு. இராம. அரங்கண்ணல்: தாய்லாந்து, பக்கத்திலுள்ள மலேஷியா நாடுகள் போன்ற வெளிநாடுகளில் தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிற ஹெவி எலக்ட்ரிக்கல் குட்ஸ்க்கு ஏராளமான கிராக்கியிருப்பதால் நமது அரசு தூதுக்குழு ஒன்றை அனுப்பி அங்கு நம் பொருள்களின் விற்பனையை அதிகரிப்பதற்கு மார்க்கம் இருக்கிறதா என்று காண உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போதே அடிக்கடி நம் தொழில் அதிபர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு சந்தை பார்ப்பதற்காகச் சென்று வருகிறார்கள். நாமும் அதற்கு ஊக்கம் அளித்து வருகிறோம். மலேஷியா நாட்டைப் பொருத்த அளவிற்கு நம் தொழில் அதிபர்கள் குழு அங்கு சென்று வந்தது. இங்கு கூட மலேஷியாவிற்கு அதிகமான பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு என்று ஒரு சங்கம் அமைத்து அவர்களும் இதைப் பற்றி ஆராய்கிறார்கள். அப்படி ஏற்றுமதி செய்வதோடு நம் தொழில் அதிபர்கள் மலேஷியா நாட்டில் தொழில் தொடங்குவதற்கு சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி: மலேஷியா நாட்டிற்கு இங்கிருந்து ஒரு தூது கோஷ்டி போனதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு விலைகள் குறைவாக இருக்கிறது, இங்கே விலைகள் கூடுதலாக இருக்கிறது. இப்படியிருக்கும்போது நமக்கு அது கட்டுப்படியாகுமா என்பதைப் பற்றி அமைச்சர் அவர்களின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கு உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கும் நாம் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கும் விலை வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் நம் நாட்டில் உற்பத்திச் செலவு குறைவாக இருந்தால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். சில சமயங்களில் வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டும் என்ற காரணத்திற்காக சில சலுகைகள் கொடுக்கிறோம். நம் மாநில அரசு கூட சில வரிச் சலுகைகளைக் கொடுக்கிறது. அப்படிச் சலுகைகள் கொடுக்கிற காரணத்தினால், நாம் அன்னியச் செலாவணி பெறமுடிகிறது. இது உலக வியாபாரத்தில் ஒரு அங்கம்.

சித்திரைச்சாவடி கண்டசாரி சர்க்கரை ஆலை.

* 241 வினா—திரு. இரா. மாணிக்கவாசகம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை தாலுக்கா, சித்திரைச்சாவடி கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள கண்டசாரி சர்க்கரை ஆலை (அன்னபூரணி) வேலை செய்யவில்லை என்பது உண்மையா?